# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண்: 252/2017/பேரூ

ஆணை நாள்: 06-07-2018.

திருமதி. சி. யமுனா,
க/பெ. திரு. ஆர். முருகேசன்,
9/94, அதிகரெட்டி (அஞ்சல்)
நீலகிரி மாவட்டம்.

– முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
கேத்தி பேரூராட்சி,
நீலகிரி மாவட்டம்.

– எதிர் மனுதாரர்

## ஆணை

முறையீட்டு மனுதாரர் திருமதி. C. யமுனா என்பவரது 09.08.2017 நாளிட்ட புகார் மனு 15.11.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்றது. மேற்படி மனு உரிய படிவத்திலும் நீதிமன்ற வில்லைக் கட்டணத்துடனும் சமர்ப்பிக்கப்படவில்லை. இருப்பினும், போலி பிறப்பு சான்று பேரூராட்சியால் வழங்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்ட புகாரின் தன்மையினைக் கருதி முறைமன்ற எண்.252/17 ஆக இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்களிடமிருந்து அறிக்கைகள் பெறப்பட்டு உரிய பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டும், கேத்தி பேரூராட்சி செயல் அலுவலரிடம் விசாரணைகள் நடத்தப்பட்டு வாக்குமூலங்கள் பெறப்பட்டதன் அடிப்படையிலும் கீழ்க்கண்டவாறான ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

மனுதாரரது கணவர் திரு. R. முருகேசன் என்பவரால் உண்மையான பிறந்த தேதியினை (01.01.1971) மறைத்தும் 01.6.1973 எனவும் அவர் பிறந்த இடமான அதிகரெட்டிக்கு பதிலாக கேத்தி கிராமம் எனக் குறிப்பிட்டு போலியான சான்று பெறப்பட்டுள்ளதாக புகார் மனுவில் தெரிவிக்கப்ப்ட்டுள்ளது.

இதுகுறித்து அறிக்கை சமர்ப்பிக்க கேத்தி பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவம் 27.11.2017 நாளிட்ட அறிவிப்பாணையில் ஆணையிடப்பட்டது. அதற்கிணங்க வரப்பெற்ற செயல் அலுவலரது 7.12.2017 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரது புகார் மனுவுடன் வரப்பெற்ற பிறப்பு சான்று நகல் தொடர்பாக மேற்படி பேரூராட்சியின் 1973ம் ஆண்டின் பிறப்பு பதிவினை ஆய்வு செய்ததில் அதில் குறிப்பிட்டுள்ள பதிவு எண்.56/1973, பதிவு நாள் 5.6.1973ன்படி திரு. R. முருகேசன் என்ற பெயர் பதிவு செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் மேற்படி பதிவுகள் அடங்கிய பதிவேட்டின் எடுபிரதியும் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

மேலும், கேத்தி பேரூராட்சி செயல் அலுவலரது 14.3.2018 நாளிட்ட அறிக்கையில் புகாரில் குறிப்பிட்டுள்ள திரு. R. முருகேசன் என்பவர் 01.6.1973ல் பிறந்து வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ள சான்றில் கேத்தி பேரூராட்சி சுகாதார ஆய்வாளரால் 27.5.1990ல் 17 ஆண்டுகள் கழித்து கையொப்பமிடப்பட்டு வழங்கியிருக்க வாய்ப்பில்லை எனவும் பிறப்பு சான்று கோரி விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி சான்றின் நகலில் குறிப்பிடப்பட்டுள்ள வரிசை எண்.56/1973ல் புகாருக்குட்பட்ட பெயர் (திரு. ஆர். முருகேசன்) இடம்பெறவில்லை எனவும் தெளிவுபட கூறப்பட்டுள்ளது.

இம்முறைமன்ற நடுவம் 14.5.2018 நாளிட்ட அழைப்பாணையின்படி 2.7.2018 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு தொடர்புடைய ஆவணங்களுடன் ஆஜராகுமாறு கேத்தி பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி 2.7.2018 அன்று விசாரணைக்கு ஆஜரான செயல் அலுவலர் புகார் மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள பிறப்பு சான்றிதழில் 27.5.1990ல் கையினால் எழுதப்பட்டு அலுவலக முத்திரையிடப்பட்டுள்ளதாக உள்ளது. மேற்படி சான்றிதழில் உள்ள முத்திரைக்கும் பேரூராட்சி அலுவலகத்திலுள்ள முத்திரைக்கும் வேறுபாடு உள்ளதெனவும் சுகாதார ஆய்வாளர் (Sanitary Inspector) முத்திரையும் பேரூராட்சியைச் சார்ந்தது அல்ல எனவும் குறிப்பிட்டு இது போலி சான்றிதழ் என வாக்குமூலம் சமர்ப்பித்துள்ளார். மேலும் மேற்படி புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள சான்றிதழில் உள்ள வ. எண்.56/1973 குறித்து பேரூராட்சியின் பிறப்பு பதிவேட்டில் பரிசீலித்ததில் மேற்படி வரிசை எண்ணில் கண்ட பதிவு 'பெண்' பால் இனத்தில் பதிவு உள்ளது. மேலும் பேரூராட்சி பதிவேடு அடிப்படையில் 56/1973 என்பது திரு. முருகேசன் சம்பந்தப்பட்டதல்ல என்றும், ரோஸி, த/பெ. திரு. சுந்தரராஜ் என உள்ளதெனவும் குறிப்பிட்டு வாக்குமூலம்அளித்துள்ளார். மேற்படி பிறப்பு சான்றிதழ் கேத்தி பேரூராட்சி அலுவலகத்திலிருந்து வழங்கப்படவில்லை என கேத்தி பேரூராட்சி செயல் அலுவலர் உறுதிபட தெரிவித்து தொடர்புடைய பதிவேட்டினையும் பரிசீலனைக்கு உட்படுத்தினார்.

மனுதாரர் தனது கணவர் 27.5.90ல் பெறப்பட்டது போலி பிறப்பு சான்றிதழ் என்று மனுவில் குறிப்பிட்டுள்ளார். நிகழ்வு நடந்து 5 ஆண்டுகள் கடந்து விட்டது. மேலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள சான்றிதழ் பேரூராட்சியிலிருந்து வழங்கப்படவில்லை என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரரின் மனு, செயல் அலுவலர் அறிக்கை, வாக்குமூலம், தொடர்புடைய பதிவுகள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டது. இதில் கேத்தி பேரூராட்சி மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை ஏதுமில்லை எனக்கருதி முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 6– ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.
–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

பெறுநர்:

1) திருமதி. சி. யமுனா,
க/பெ. திரு. ஆர். முருகேசன்,
9/94, அதிகரெட்டி (அஞ்சல்)
நீலகிரி மாவட்டம்.
2) செயல் அலுவலர், அதிகரெட்டி பேரூராட்சி,
அதிகரெட்டி,
நீலகிரி மாவட்டம்.
3) செயல் அலுவலர்,
கேத்தி பேரூராட்சி,
கேத்தி,
நீலகிரி மாவட்டம்.
4) பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
நீலகிரி மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நீலகிரி.